அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையிலே, நான் ஏற்கெனவே இதுசம்பந்தமாக தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். தமிழகத்திலே Medicinal Plantation Development Area என்று வனத் துறையின் மூலமாக எட்டு இடங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அவற்றிலே தொட்டபெட்டா என்ற ஒரு இடம் இருக்கிறது. ஊட்டியைப் பொறுத்தவரை அங்கே இருக்கக்கூடிய மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு வனத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 109, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

109—

விற்பனைப் பிரிவு

***18581—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் எளிதில் கிடைக்க அரசு சார்பான விற்பனைப் பிரிவு ஒன்று திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி சி.எம். சூரியகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் முன்னேற்றத்திற்கு மகத்தான திட்டங்களைத் தந்து, மகளிர் வாழ்வில் ஒளியேற்றி பெண்களின் பெருமையைத் தரணிக்கு உயர்த்திக் காட்டிய அன்னையே, ...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2005 மார்ச் 8]

திருமதி சி.எம். சூரியகலா: இமயம் தலை வணங்க, எதிரிகள் கதி கலங்க, மக்கள் சக்தி மகத்தான சக்தி, எத்தனை சக்தி எதிர் நின்றாலும், எங்கள் அன்னையின் சக்தியே அகிலத்தை வெல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நிரூபித்த எங்கள் அம்மாவை வணங்கி, குடியாத்தத்தில் சிறியதும், பெரியதுமாக, கையினால் தயாரிக்கும் தொழில் நிலையங்கள் ஏறத்தாழ 150 நிறுவனங்கள் உள்ளன. இவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்கள், பாஸ்பரஸ் வட இந்தியாவில் இருந்தும், குச்சிகள், கேரளா மற்றும் ஒரிசாவில் இருந்தும் வருகின்றன. தற்போது, அம்மா அவர்கள் கொண்டு வந்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம், தீக்குச்சி மரங்களை வளர்க்க எனது தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு ஒரு கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு, அம்மா அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த மரங்கள் வளர்ந்து, பலன் தர நீண்ட காலம் ஆகும். அதனால் சிறிய மற்றும் நடுத்தர தீப்பெட்டித் தொழில் நிலையங்கள், இந்த மூலப் பொருட்களைப் பெறுவதில் அதிக செலவு ஏற்படுகிறது. அதனால் அம்மா அவர்கள் அரசு கதர் வாரியத்தின் மூலமோ, சிறு தொழில் மூலமோ தீப்பெட்டி மரக் குச்சிக்காக கிடங்கு ஒன்றும், பாஸ்பரஸ் போன்ற மூலப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு நிலையம் ஒன்றும் அமைத்து, கையினால் பீடி, தீப்பெட்டி கைத்திறத் தொழில் செய்யும் 45 ஆயிரம் குடும்பங்களின் வாழ்க்கையை மலரச் செய்திடுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனம் கடந்த 20 ஆண்டுகளாக வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் மூலப் பொருட்கள் கிடங்கு அமைத்து, அதன்மூலம் தீப்பெட்டித் தொழில்களுக்குத் தேவையான பொட்டாஷியம் குளோரைடு மற்றும் மெழுகு போன்ற மூலப் பொருட்களை விநியோகம் செய்து வந்தது. பொட்டாஷியம் குளோரைடு வாங்குவதற்கு நுகர்வோர்கள் முன்வராததால், அதன் விநியோகம் 12 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நிறுத்தப்பட்டது. மேலும், மெழுகு விநியோகத்தைப் பொறுத்தவரை, கடந்த 5 வருடங்களாக நுகர்வோர் சிட்கோ நிறுவனத்திடம், மெழுகு வாங்க முன்வரவில்லை. இதுதவிர 2001 ஆம் ஆண்டு, குடியாத்தம் மூலப் பொருட்கள் கிடங்கில் நடைபெற்ற மெழுகு விற்பனையில் கிடைத்த வருமானம், சிட்கோ, மூலப் பொருட்கள் கிடங்கு அமைத்து உள்ள வாடகைக் கட்டடத்திற்குச் செலுத்தவேண்டிய வாடகைக்குக்கூட ஈடாகவில்லை. சிட்கோ நிறுவனமானது, மூலப் பொருட்களை இலாப நோக்கம் இல்லாது விநியோகம் செய்து வந்தாலும், நுகர்வோர் மெழுகு வாங்க முன்வராத காரணத்தினால், குடியாத்தத்தில் உள்ள மூலப் பொருட்கள் கிடங்கு விற்பனைப் பிரிவினைத் தொடர்ந்து நடத்த

முடியவில்லை. இதுதவிர, தீப்பெட்டித் தொழில் நிறுவனங்களுக்கு, மெழுகினை ரொக்கத்திற்குத்தான் சிட்கோ நிறுவனம் விற்பனை செய்து வருகிறது; கடனுக்குத் தருவதில்லை. ஆகவேதான், தனியார் நிறுவனங்கள், மெழுகினைக் கடன் முறையில் விநியோகம் செய்வதால், குடியாத்தத்தில் மெழுகு வாங்குவதற்கு யாரும் முன்வராத காரணத்தால், விற்பனைப் பிரிவு தொடங்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. *(குறுக்கீடு)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் — மத்திய நிதி அமைச்சர் கூற்று

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியை நான் கொண்டு வருகிறேன். இன்றைக்குக் காலையிலே நான் பத்திரிகையிலே பார்க்கிறபோது—முதலமைச்சர் அவர்கள் படித்து இருப்பார்கள் -- மத்திய நிதி அமைச்சர் அவர்கள், மத்திய பட்ஜெட்டைப் பற்றி ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, "சேதுசமுத்திரத் திட்டத்தினுடைய கால்வாய்த் திட்டம் தாமதம் ஆவதற்கு, மாநில அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் கேட்டோம்; சென்ற ஆண்டு ஜூலையிலே கேட்டோம் இதுவரையிலே தரவில்லை; அது குறித்து Court-க்கும்போய் இருக்கிறார்கள். எனவே, சேது சமுத்திரத் திட்டம் வருவதற்குத் தடையாக இருப்பது... *(குறுக்கீடு)* excuse me; சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி Port Trust Chairman, இங்கே தமிழ்நாடு Pollution Control Board Chair Person-க்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் அந்த Petition-ஐத் தள்ளுபடி செய்துவிட்டது; dismiss செய்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.